தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
Postal Address: P O Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au info@tsch.org.au

# தமிழறிவுப் போட்டி
# ஐந்தாம் வகுப்பு
# 2015

# தமிழறிவுப் போட்டி – 2015

## ஆண்டு - 5

## ஆரம்பப்போட்டி - 30 கேள்விகள்

## முதல் சுற்று - 10 கேள்விகள்

ஒன்றுக்கு மேற்பட்ட விடைகள் தரப்பட வேண்டிய வினாக்களுக்கு அனைத்து விடைகளும் வழங்கினால் மட்டுமே சரியான விடையாகக் கருதப்படும்.

ஒவ்வொரு சரியான விடைக்கும் 10 புள்ளிகள்

எல்லா விடைகளையும் தரத்தவறினால் பிழையான விடை எனக் கருதப்பட்டுப் 5 புள்ளிகள் கழிக்கப்படும்.

# முதற் சுற்று

# 10 கேள்விகள்

1. உயிர் எழுத்துக்கள் எத்தனை?

1 விடை:

12

## 2. முத்தமிழ் எனப்படுபவை எவை?

•

2. விடை: இயல்

இசை

நாடகம்

3. ஓடி விளையாடு பாப்பா

என்று தொடங்கும் பாடலைப் பாடியவர் யார்?

3 விடை:

பாரதியார்

4. மதுரையில் தமிழரின் கட்டடக் கலைக்கு சான்றாக விளங்கும் ஒரு கட்டடத்தின் பெயர் தருக.

4 விடை: மதுரை மீனாட்சி அம்மன் கோயில்

5. தேர் ஓட்டுபவரை எப்படி அழைப்பார்கள்?

5 விடை: சாரதி

பாகன்

6. திருக்குறளை எழுதியவர் யார் ?

6 விடை:

திருவள்ளுவர்

7. தமிழரின் சிற்பக்கலையின் சிறப்பையும் கலை நுட்பத்தையும் கொண்டுள்ள ஓரிடம்

7. விடை:

மதுரை

மாமல்லபுரம்

தஞ்சாவூர்

8. .இடைவெளியை நிரப்புக

உணவை உண்டு மகிழ்ந்தார்கள்

அதுபோல

நடனத்தைக் …….. ……..

8. விடை: கண்டு களித்தார்கள்

9.

அவுஸ்திரேலியாவில் தமிழர்கள் பெருமளவில் வாழும் மாநிலம் எது?

9. விடை:

நியூ சவுத் வேல்ஸ்

10.

அவுஸ்திரேலியாவின் அரச சின்னத்தில் காணப்படும் உயிரினங்கள் எவை?

10. விடை:

கங்காரு

இமியு

முதற் சுற்று முடிவடைந்தது.

இரண்டாம் சுற்று 10 கேள்விகள்

11. வள்ளுவர் கோட்டம் எங்கு அமைந்துள்ளது?

11. விடை: சென்னையில்

12. வள்ளுவர் கோட்டத்தின் சிறப்பு என்ன?

12 விடை: (ஏதாயினும் ஒன்று)

- திருவள்ளுவர் நினைவாக
- தேரில் வள்ளுவர் அமர்ந்திருப்பது போல்
- கருங்கல்லால் ஆன தூண்களால்
- 1330 குறள்களையும் தூண்களில் கொண்டு

அமைக்கப்பட்டது

13. யாதும் ஊரே யாவரும் கேளிர்

இதன் பொருள் என்ன?

13 விடை: எல்லா ஊரும் எமதூர்

எல்லோரும் எமது உறவினர்

14. திருவள்ளுவரின் 133 அடி உயரச் சிலை எங்கே அமைந்துள்ளது?

14 விடை: கன்னியாகுமரி

15. சிட்னியில் திருவள்ளுவரின் சிலை எங்கே அமைந்துள்ளது?

15 விடை:

தமிழர் மண்டபம்

றீஜன்ஸ் பார்க்

16. குழம்பியிருக்கும் இந்தச்சொல் என்ன?

வ ல பு ர்

16. விடை:

புலவர்

17. கண்ணகி எரித்த நகரம் எது?

1. திருச்சி
2. மதுரை
3. சென்னை

17. விடை:

மதுரை

18. இடைவெளியை நிரப்புக

நோயற்ற வாழ்வே ________ ______

18. விடை:

குறைவற்ற செல்வம்

19. இராமனின் தம்பியர் இருவர் பெயர் தருக.

19. விடை:

பரதன்

இலக்குவன்

சத்துருக்கன்

20. இராமாயணத்தை முதலில் தமிழில் பாடியவர் யார்?

20. விடை:

கம்பர்

இரண்டாம் சுற்று முடிவடைந்தது

மூன்றாம் சுற்று

10 கேள்விகள்

21. அவுஸ்திரேலியாவில் அடிக்கடி நிகழும் இரண்டு இயற்கை அழிவுகளின் பெயர் தருக.

21. விடை:

காட்டுத் தீ

வெள்ளப் பெருக்கு

வரட்சி

22. யாரைத் தீயணைப்பு வீரர்கள் என்கிறோம்?

22. விடை:

தீயை அணைக்கப் பாடுபடும் படையைச் சேர்ந்தோர்

23. இராம இலக்குவர் கங்கையைக் கடந்து செல்லப் படகு ஓட்டியவர் யார்?

23. விடை:

குகன்

24. விமானி என்பவர் யார்?

24. விடை:

விமானம் ஓட்டுபவர்

25. நான் முக்கனிகளில் ஒருவன்.
எனது தோல் முள்ளு முள்ளாக இருக்கும்.
நான் யார்?

25. விடை:

பலாப் பழம்

26. பாரம்பரியமாக தமிழர் வாழும் நாடு இரண்டு தருக?

26. விடை:

இந்தியா அல்லது தமிழ்நாடு

இலங்கை அல்லது ஈழம்

27. தமிழர்களின் கலாச்சாரம் அல்லாதது?

பெரியோர்களைக் கனம் பண்ணல்

பெரியோரை பெயர் சொல்லி அழைத்தல்

27. விடை:

பெரியோரை பெயர் சொல்லி அழைத்தல்

28. கப்பல்கள் நிற்குமிடம் எது?

28. விடை:

துறைமுகம்

29. என் அப்பாவின் தங்கையின் கணவன் எனக்கு என்ன உறவு?

29. விடை: மாமா

30. இதில் ஒன்று வேறுபட்டது? அது என்ன?

யாழ்ப்பாணம்

தஞ்சாவூர்

மதுரை

30. விடை: யாழ்ப்பாணம்

மூன்றாம் சுற்று நிறைவுபெற்றது

# இறுதிப்போட்டி

# 15 கேள்விகள்

1. பல மிருகங்களை ஒரே இடத்தில் பார்க்க எங்கு செல்ல வேண்டும்?

1. விடை:

மிருகக் காட்சிச் சாலை

2.

பின்வருவனவற்றுள் ஒன்று வேறுபடுகின்றது. அது எது?

தோசை

புட்டு

மணிக்கூடு

அப்பம்

2. விடை:

**மணிக்கூடு**

•

3. “ஓடி விளையாடு பாப்பா,
நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா”
இதன் அடுத்த அடியைக் கூறுக

3. விடை:

**கூடி விளையாடு பாப்பா**

4. திருக்குறளை முடிக்கவும்.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி

…..   …..   ……

4. விடை:

**பகவன் முதற்றே உலகு**

5.

இந்த மாதம் ஆவணி.

அடுத்த மாதத்தின் பெயர் என்ன?

5. விடை:

புரட்டாசி

6. தமிழ் மொழிக் கல்வி தரும் ஹோம்புஷ் எனத் தொடங்கும் பாடலை எழுதியவர் யார்?

6. விடை:

எமது **ஆசிரியர் ச. தேவராசா**

7. பரதநாட்டியம் யாருடைய கலைவடிவம்?

7. விடை: தமிழர்களின் கலை

8. உணர்ச்சிக் கவிஞர் என்று அழைக்கப்படும் ஈழத்துக் கவிஞர் யார்?

8. விடை:

காசி ஆனந்தன்

9. நரம்புக் கருவி கம்பி(தந்தி)யால் செய்த வாத்தியம் இரண்டு கூறுக

9. விடை

வீணை, வயலின், யாழ்

•

10. இசைச் சொல் தெரியுமா?

பாகம்

10. விடை: **யாகம், நாகம்**

11. இதில் ஒன்று வேறுபட்டது. அது எது?

தைப்பொங்கல் பண்டிகை

திருமண விழா

பிறந்தநாள் விழா

11. விடை: **தைப்பொங்கல் பண்டிகை**

12. பழங்கால விளையாட்டுக்களில் ஒன்று கூறுக:

12. விடை: கிளித்தட்டு

போர்த் தேங்காய் அடி

சடுகுடு

வண்டிச் சவாரி

13. வசனமாக ஒழுங்குபடுத்திக் **கூறுக:**

நீர்வாழ் சிட்னியில் ஒன்றுண்டு

காட்சிச்சாலை உயிரினக்

13.விடை

சிட்னியில் நீர்வாழ் உயிரினக் காட்சிச்சாலை ஒன்றுண்டு

14. வசனமாக ஒழுங்குபடுத்திக் கூறுக:

எப்போதும் குறித்து நன்று

சுவையான தகவல்களை வைத்தல்

14.விடை:

சுவையான தகவல்களை எப்போதும் குறித்து வைத்தல் நன்று.

15. வசனமாக ஒழுங்குபடுத்திக் கூறுக:

மதுரை வரலாறு ஈராயிரம்

ஆண்டுகளுக்கு முந்திய கொண்டது

➢

15. விடை:

மதுரை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முந்திய வரலாறு கொண்டது

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முந்திய வரலாறு கொண்டது மதுரை

இறுதிப்போட்டி நிறைவுற்றது.

நன்றி